# திராவிடப் போராளிகள்

50

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**



ஓவியம் : ரவி பேலட்

# அலமேலு அப்பாதுரை

## பெண்கள் சீரணியின் படைத்தலைவர்!

“இன்று இந்தி எதிர்ப்பு என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. இன்று இந்தி எதிர்ப்பில் தீவிரம் காட்டுவது போலவே, அன்றும் தீவிரமாக ஈடுபட்டவர் அலமேலு அம்மையார் ஆவார்.

இந்தி எதிர்ப்பு மறியலைத் தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் பள்ளிக்கூடத்திற்கு எதிரில், நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மறியலில் ஈடுபட்ட தியாகி என்று அலமேலு அம்மையாரைக் குறிப்பிட்டால், அது மிகையாகாது.

எவ்வளவு அலை வீசினாலும், மேல் தளத்திலே நிற்கும் கப்பல் தலைவனைப் போல அவர் கொளுத்தும் வெயிலையும் பாராது, எரிக்கும் சூட்டிலே நின்றுகொண்டு இருந்தார்!" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்ட பெருமைக்குரியவர் அலமேலு அப்பாதுரை ஆவார். இளம் வயதில் திராவிட இயக்கக் கொள்கைகளைக் கேட்டும் படித்தும் வளர்ந்த அலமேலு, பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரை மணந்தபின் தீவிர திராவிட இயக்கத் தொண்டரானார்.

கா.அப்பாதுரையார் திராவிட இயக்கத்தின் அறிவுக் களஞ்சியமாகப் போற்றப்பட்டவர். கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தவர். தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், மலையாளம் என்ற பலமொழிகளை இளம்வயதிலேயே கற்றவர். அதனால் ‘பன்மொழிப் புலவர்’ என்று அழைக்கப்பட்டார்.

தாய்மொழிப்புலமை மட்டுமன்றி, விரிந்த நோக்குடைய வரலாற்றியல் ஆய்வாளர், மொழியியல் அறிஞர், பத்துக்கும் மேற்பட்ட மொழிகளைக் கற்று அந்த மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர். மானுடவியல் தொல்லியல் குறித்த ஆய்வுகளை ஒப்பிட்டு எழுதியவர். ‘திராவிடன்’, ‘ஜஸ்டிஸ்’, ‘குமரன்’, ‘தென்றல்’, ‘விடுதலை’ உட்பட ஏராளமான இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என திராவிட இயக்கத் தலைவர்கள் அனைவரின் நன்மதிப்பையும் பாராட்டுகளையும் பெற்றவர்.

‘குமரிக்கண்டம்’, ‘தென்னாடு’, ‘தென்மொழி’, ‘தென்னாட்டுப் போர்க்களங்கள்’, ‘1,800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்’, ‘இதுதான் திராவிட நாடு’, ‘உலக இலக்கியங்கள்’, ‘முப்பால் ஒளி’ என அவர் எழுதிய நூல்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகும். மேலும் மேல்நாட்டு அறிஞர்கள் ஐன்ஸ்டீன், பெஞ்சமின் பிராங்க்ளின் உள்ளிட்ட பல மேதைகளின் வாழ்க்கை வரலாறுகளை தமிழ் அறிவு உலகத்துக்கு அறிமுகப்படுத்தியும் பல மொழிபெயர்ப்பு நூல்களைப் படைத்தும் அளித்த பேரறிஞர்.

### களப்பணியாளர்

திராவிட இயக்கப் பணியில் தன் துணைவர் அப்பாதுரையாருடன் இணைந்து செயல்பட்ட அலமேலு அம்மையார் வியக்கத்தக்க செயல்திறன் கொண்டவர். அதனால் சிறந்த களப்பணியாளராகவும் பேச்சாளராகவும் தன் வாழ்வை அமைத்துக் கொண்டார். தந்தை பெரியார் முன்னின்று நடத்திய முதல் இந்தி எதிர்ப்புப் போராட்ட காலகட்டம் தொடங்கி அலமேலு அம்மையாரின் இடையறாத பணி தொடர்ந்தது.

1948 ஆம் ஆண்டு இந்தித் திணிப்பை எதிர்த்து மறியல் போராட்டத்தில் கலந்துகொண்ட அப்பாதுரையாரும் அலமேலு அம்மையாரும் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். ஆனால், அவரது உள்ள உறுதி சிறிதும் குறையவில்லை.

1949 ஆம் ஆண்டு தந்தை பெரியார் நடத்திய திருக்குறள் மாநாட்டின் பெண்கள் தொண்டர் படைக்கு அலமேலு அம்மையார் பொறுப்பேற்றுக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய பிறகு அலமேலு அம்மையார் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர் ஆனார். ஆயினும் தந்தை பெரியார் அவர்களிடம் மாறாத மரியாதை கொண்டிருந்தார்.

1952 ஆம் ஆண்டு ரயில் நிலையங்களில் எழுதப்பட்டிருந்த இந்திப் பெயர்களை அழிக்கும் போராட்டத்தில் அலமேலு அம்மையார் தன்னுடன் பெண்கள் பலரை இணைத்துக் கொண்டு போராடினார். அவரது பேச்சாற்றல் பொது மக்களை ஈர்க்கக் கூடியதாக இருந்தது.

20.10.1956 அன்று சென்னை திருவல்லிக்கேணி 41-வது வட்ட தி.மு.கழகம் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்ட விளம்பர அறிக்கையில் “தோழர் என். ஜீவரத்தினம் அவரது தலைமையில் அறிஞர் அண்ணா தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் பேசுவர். ‘இசை முரசு’ அனீபா இன்னிசை வழங்குவார்’’ என்று குறிப்பிடப்பட்டது என்றால், அம்மையாரது பணியின் அருமையைப் புரிந்து கொள்ளமுடியும்.

**அலமேலு அம்மையார் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணிச் செயலாளராகவும், தலைமை நிலையச் செயலாளராகவும் பொறுப்புகள் வழங்கப் பெற்றார்.**

### கருப்புக் கொடியேந்திய கைகள்

1956 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின் ஜாதியைக் காப்பாற்றும் பிரிவுகளை நீக்க வேண்டும் என்று தந்தை பெரியார் போராடி வந்தார். அதற்காக இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, தந்தை பெரியாரை ‘மனநலம் குன்றிய முதியவர்’ என்றும் தி.மு.க. வின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைச் ‘சிறுபிள்ளைத்தனமானது’ என்றும் பேசியிருந்தார்.

அதன்பின் 06.01.1958 ஆம் அன்று பிரதமர் நேரு சென்னை வருகிறார் என்று அறிவிக்கப்பட்டது அவரது வருகையை எதிர்த்து, பொதுக்கூட்டம் நடத்த தி.மு.கழகத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா கலைஞர், நாவலர், ஈ.வெ.கி.சம்பத், பேராசிரியர் கே.ஏ.மதியழகன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி ஆகிய தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். எனவே, நேருவின் வருகைக்குப் பெரிய எதிர்ப்பு இருக்காது என்று அரசும் காவல் துறையும் நம்பி இருந்தனர். ஆனால் 06.01.1958 அன்று பிரதமர் நேரு சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது அணி அணியாக ஆயிரக்கணக்கான திராவிட இயக்கத் தொண்டர்கள் கறுப்புக்கொடியோடு விமான நிலையத்தில் குவிந்தார்கள். அந்தக் கறுப்புக்கொடிப் போராட்டத்தைத் தலைமையேற்று முன்னின்றவர்கள் அலமேலு அப்பாதுரையும், வெற்றிச்செல்வி அன்பழகன் (பேராசிரியர்) என்ற வரலாற்றுச் செய்தி, திராவிட இயக்கப் போராளிகளின் பெருமைக்குச் சான்றானது.

தொடர்ந்து 1959 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர்கள் 45 பேர் வெற்றி பெற்றார்கள். அந்த 45 பேரில் அலமேலு அம்மையார் செம்மாந்து நின்று, மாநகராட்சிப் பணியில் சிறப்பாகச் செயலாற்றினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காகத் தேர்தல் காலங்களில் ஓய்வின்றிப் பிரச்சாரம் செய்தார். 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வரான பின்பு சீரணி என்ற ஒரு தொண்டரணியை உருவாக்கினார். 16.08.1967 அன்று அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட அந்தச் சீரணியின் நோக்கம் ஊதியமில்லாமலும் தன்னலம் கருதாமலும் அறவழி நின்று சமூகத்துக்குத் தொண்டு செய்தல், தன்னம்பிக்கை வளர்த்தல், கல்வி அறிவும், பொது அறிவும் வளர பணி செய்தல், தீண்டாமையை அகற்றுதல் போன்றவையாகும். அரசுக்குத் துணை செய்ய ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியை தனி அதிகாரியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அந்தச் சீரணியின் பெண்கள் அமைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டவர் அலமேலு அப்பாதுரை அவர்கள். அவரது தலைமையில் பெண்கள் சீரணியின் பணி பெரும் பாராட்டைப் பெற்றது.

அலமேலு அம்மையாரின் உழைப்பைப் பாராட்டும் விதமாக 1968 ஆம் ஆண்டு அவர் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்ற மேலவையில் எம்.எல்.சி.யாக அவரது பங்களிப்புப் பாராட்டத்தக்கதாக அமைந்தது.

அலமேலு அம்மையார் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணிச் செயலாளராகவும், தலைமை நிலையச் செயலாளராகவும் பொறுப்புகள் வழங்கப் பெற்றார். தனது கடமைகளைத் திறம்பட நடத்திக் காட்டினார்.

### தமிழ்ப் பணியும் செயல் வேகமும்


இயக்கப் பணிகள், போராட்டங்கள் இவற்றோடு தன் துணைவரான பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரின் ஆராய்ச்சி நூல்களை வெளியிடும் பொறுப்பையும் ஏற்று, அலமேலு பதிப்பகத்தின் உரிமையாளராகவும் செயலாற்றி வந்தார். 1989 ஆம் ஆண்டு அப்பாதுரையார் மறைந்த பிறகும், தனது இயக்கப் பணிகளைத் தொய்வின்றித் தொடர்ந்தார்.

செயல் வேகமும், சீறும் குணமும் அலமேலு அப்பாதுரை அம்மையாரின் இயல்புகளாக இருந்தன. அதன் விளைவாகச் சில காலம் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டு விலகியிருந்தார். ஆனால், எழுபது ஆண்டுகளாக இணைந்திருந்த இயக்கப்பற்று மீண்டும் அவரைத் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே திரும்பச் செய்தது. அவரது சிறிய காலத் தடுமாற்றத்தைப் பொருட்படுத்தாமல் மீண்டும் அவரை அதே பெருமையோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தன் சொந்த இடத்தைச் சேர்ந்த நிறைவோடு 27.06.2001 அன்று காலமானார் அலமேலு அப்பாதுரை அம்மையார். அவரது போராட்டங்களே அவர் விட்டுச் சென்ற பதிவுகள் ஆகின.

(வருவார்கள்...)

---

## வைக்கம் போராட்டம் : விமர்சனமும் பதிலடியும்!




வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பினை சிறுமைப்படுத்தி எழுதி இருந்தார் ஜெயமோகன் என்கிற எழுத்தாளர். வரலாற்றினை திரிபு செய்யும் அவரது முயற்சிகளுக்கு எதிர்வினையாக, மூத்த பத்திரிகையாளர் ப.திருமாவேலன் எழுதியிருக்கும் நூல்தான் ‘வைக்கம் வீரரும் ஜெயமோகன் கயமையும்’. வைக்கம் போராட்ட வரலாறு, அந்தப் போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பு ஆகியவை குறித்து, தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் இருந்து தரவுகளைத் திரட்டி ஜெயமோகனின் அவதூறுகளுக்கு பதிலடி அளித்துள்ளார் திருமாவேலன். வைக்கம் போராட்டக் களத்தில் பெரியாரின் நேரடிப் பங்களிப்பு மற்றும் அவரது தோழர்களின் வாயிலாக, ஆற்றிய பணிகளையும் ஆணித்தரமாக நிறுவி, அர்த்தமற்ற விமர்சனங்களை அடித்து நொறுக்குகிறது இந்நூல். 360 பக்கங்களில் வைக்கம் போராட்டத்தை 360 டிகிரி கோணத்தில் விளக்கும் இந்த வரலாற்று ஆவணத்தை, கருப்புப் பிரதிகள் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. நூலின் விலை 400 ரூபாய். வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு காலத்தில், அவதூறுகளுக்கும் பதில் சொல்ல இந்த நூல் சிறந்த ஆவணம்.

---

## :ப்ளாஷ்பேக்



### பிறந்த நாளில் வாழ்த்து!



பாண்டியன்

1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் தேதி, நானும், திருப்பூர் தெற்கு மாவட்டம் தாராபுரம் நகரக் கழக தற்போதைய அவைத் தலைவராக உள்ள கதிரவன் அவர்களும் அறிவாலயம் சென்றோம். அன்று எனது பிறந்த நாள் என்பதால், முத்தமிழறிஞர் கழகத் தலைவர் கலைஞர் அவர்களிடமும், அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவரும் முதலமைச்சருமான தளபதியார் அவர்களிடமும் வாழ்த்துப் பெற ஆசையுடன் காத்திருந்தோம். தளபதி அவர்கள் அறிவாலய நூலகத்துக்குச் சென்று வரும் போது, வாழ்த்துப் பெற்று புகைப்படம் எடுத்துக்கொண்டோம். பிறகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடமும், கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களிடமும் வாழ்த்துப் பெற்றோம்.

**-கே.பாண்டியன், தாராபுரம், திருப்பூர் தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்பு ங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### அரசியல் மாண்புக்கு அடையாளம் அண்ணா!

**1967 சட்டமன்றத் தேர்தலில் முதன்முறையாக தி.மு.க வெற்றிபெற்று ஆட்சியமைத்த போது, விருதுநகரில் காமராசரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிபெற்ற மாணவர் சீனிவாசனையும் அமைச்சராக்க வேண்டுமென்று அண்ணாவுக்குக் கோரிக்கைகள் வந்தன. “சீனிவாசனுக்கு அமைச்சராக எல்லா தகுதியும் உண்டு, ஆனால், ஒரு மாபெரும் தலைவரின் தோல்வியை விழாவாகக் கொண்டாடத் தான் விரும்பவில்லை’’ என்று அந்தக் கோரிக்கைகளை நிராகரித்துவிட்டார் அண்ணா. ‘‘ஒருவேளை சீனிவாசனுக்கு அமைச்சர் பதவி கொடுத்தால், சரித்திரம் என்னைச் சபிக்கும்’’ என்று கூறிவிட்டார் அண்ணா.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 355




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131